1970 ஆகஸ்ட் 31] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மாணவர்கள் வெளியேறிய பிறகு அமைதியான சூழ்நிலை இருந்து வருகிறது.

இந்த மாதிரிச் சூழ்நிலையில் சில நாட்கள் மூடிவைத்தால்தான் இருசாராருக்கும் இடையே ஒரு அமைதி ஏற்பட முடியும். சில நாட்கள் கழித்து நிலைமை கட்டுக்கு அடங்கிய பிறகு பல்கலைக்கழகத்தைத் திறக்க முயற்சிகளைத் துணைவேந்தர் அவர்கள் எடுத்துக் கொள்ளுவார்கள். இந்த அளவில் நிலைமை இருப்பதால், இப்போது அமைதி ஏற்பட்டிருக்கும் காரணத்தால், நாம் தலையீடு செய்ய வேண்டிய நிலை ஒன்றும் இல்லாத காரணத்தால், இதிலே பல்கலைக்கழக அளவில் முடிவு எடுக்க வேண்டிய காரணத்தால், அரசாங்கம் துணைவேந்தரைக் கலந்து இது பற்றி முடிவு செய்யும் என்று கூறி, இதை விவாதிப்பதற்காக இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

4. அமைச்சரின் விளக்க உரை. (அ) விற்பனை வரி இலாகா குறித்த, உணவு-வணிக வரித் துறை அமைச்சரின் விளக்க உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது, உணவு-வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் அவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, விற்பனை வரி இலாகா குறித்து ஓர் அறிக்கையைப் படிக்கிறேன்.

இப்போதுள்ள புதிய திருத்தப்படி ரூ. 100-க்கும் அதற்கு மேலும் விற்பனை செய்பவர்கள், வாங்குபவரின் முழு முகவரியுடன், வாங்குபவர் வியாபாரியாக இருந்தால் அவர் உரிம எண்ணும் குறிக்கப்பட வேண்டும். இப்புதிய திருத்தத்தினுல் ஏற்பட்டுள்ள நடைமுறைச் சங்கடங்களைப் பற்றி வியாபாரிகளும், வியாபாரச் சங்கப் பிரதிநிதிகளும் சட்டப் பேரவை உறுப்பினர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், என்னையும் சந்தித்து எடுத்து உரைத்தனர். அவர்கள் விளக்கிய பிறகு நடைமுறைச் சங்கடங்கள் உள்ளதை இந்த அரசு உணர்ந்து ஏற்கனவே இருந்த விதிமுறைப்படி ரூ. 500-க்கும் அதற்கு மேலும் விற்பனை செய்தால் வாங்குபவர்கள் முகவரியையும், அவர் வியாபாரியாக இருந்தால் வியாபார உரிம எண்ணையும் குறிக்க வேண்டுமென்று விதிமுறை திருத்தியமைக்கப்படும்.

5. அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு. அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் ஏற்கனவே அறிவித்தபடி பிற்பகல் 12-30 மணிக்குப் பதிலாக இந்த அவை முடிந்த பிறகு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.